திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். மாநில மாணவரணி துணைச் செயலாளர் பி.எம்.ஆனந்த் மற்றும் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சஞ்சூர் சதீஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டிகளில் 500க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன் நடுவர்கள் வாசுதேவன் சுபஸ்ரீ, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அப்துல் காதர், ஒன்றிய செயலாளர்கள் சண்முகநாதன், சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. வழக்கறிஞர் அணியின்

மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.23-

தி.மு.க. வழக்கறிஞர் அணி, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்களுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், வருகிற 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), காலை 10.00 மணியளவில் திருவாரூர் "கலைஞர் கோட்டத்தில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்டமன்ற முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், மகா.குமார்,ஜி.என்.ரவி, மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

கழக சட்டத்துறை சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ.23-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி 6வது மண்டல பேச்சுப் போட்டி குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. அறிக்கை வருமாறு:-

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

போட்டிகளுக்கான தலைப்புகள்

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி - மாணவர்கள்
2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் 5 மண்டலங்களில் பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தற்போது 6வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 15,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- தங்கப தக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு -ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்

கே.எஸ்.இரவிச்சந்திரன் சட்டத்துறை இணைச் செயலாளர் - 98400-22250, ஜெ.பச்சையப்பன் சட்டத் துறை துணைச் செயலாளர் - 98402-60178, கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர்-94440-06999.

கே.ஜே.சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் - 98410-57345

6வது மண்டல பேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்.

25.11.2023 - (மாணவர்கள்) காலை 9.00 மணி - இடம் அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

1. அன்னை தெரசா சட்டக்கல்லூரி, புதுக்கோட்டை (தனியார்)
3. சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
4. தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.
5. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி

26.11.2023 - (வழக்கறிஞர்கள்) - காலை 9.00 மணி - திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள்.

இடம்: திருவாரூர், "கலைஞர் கோட்டம்"

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் இறையான்குடியில் பாண்டைவையாற்றில் உலக மீனவர் தினத்தை முன்னிட்டு 5000 மீன் குஞ்சுகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் விட்டார். நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குடியாத்தம் குமரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும். தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.11.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.